පළාත් රාජ්‍ය සේවා කොමිෂන් සභාව, නැගෙනහිර පළාත, ත්‍රිකුණාමලය
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, கிழக்கு மாகாணம், திருகோணமலை
PROVINCIAL PUBLIC SERVICE COMMISSION, EASTERN PROVINCE, TRINCOMALEE

ඔබේ අංකය / உமது இல / Your No

මගේ අංකය / எனது இல / My No } EP/07/03/02/43-06/2017

21.07.2017

பிரதம செயலாளர் / செயலாளர்கள் / பிரதிப் பிரதம செயலாளர்கள் /
மாகாண பணிப்பாளர்கள் / ஆணையாளர்கள் /
மாநகர ஆணையாளர்கள் / வலயக் கல்விப் பணிப்பாளர்கள் /
நகரசபை செயலாளர்கள் / பிரதேசசபை செயலாளர்கள்
கிழக்கு மாகாணம்.

**தொழில்நுட்ப சேவையின் I ஆம் தரம் அலுவலர்களை விசேட தரத்திற்கு தரமுயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சை - 2016**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2029 ஆம் இலக்க 2017.07.21 ஆந் திகதிய வர்த்தமானப் பத்திரிக்கையில் பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் செயலாளர் அவர்களால் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்திற்கமைவாக, 01.01.2016 ஆந் திகதியிலிருந்து 31.12.2016 ஆந் திகதி வரை மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கைகளை நிரப்புவதற்கு வர்த்தமானப் பத்திரிக்கையில் காணப்படும் தகைமைகளையுடைய கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளில் உள்ள உத்தியோகத்தர்களுக்கு இது தொடர்பாக அறிவித்து, வர்த்தமானப் பத்திரிக்கையில் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய விண்ணப்பங்களைத் தயாரித்து, உரியவாறு பூர்த்தி செய்து திணைக்களத் தலைவரின் சிபார்சுடன் **2017.08.16** ஆம் திகதியோ அல்லது அதற்கு முன்னர் எனக்கு கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைக்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

i. தொழிலுநுட்ப உத்தியோகத்தர் (சிவில் / பொறியியல் / மின்னியல்)
ii. படவரைஞர்
iii. குடியேற்ற உத்தியோகத்தர்
iv. விவசாய போதனாசிரியர்
v. கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர்

மேலும் கிழக்கு மாகாண அரச சேவையில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் வர்த்தமானப் பத்திரிக்கையில் 8(iv) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்கு சமமான தொகைக்கு கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள பிரதேச செயலகமொன்றில் செயலாளர், மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு, கிழக்கு மாகாணம் என்ற பெயருக்கு பணம் செலுத்தி பெற்றுக் கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டை உரிய விண்ணப்பப்படிவத்தில் கழராதவாறு ஒட்டி அனுப்பிவைக்குமாறு உரிய உத்தியோகத்தர்களை அறிவுறுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**எச்.ஈ.எம்.டபிள்யு.ஜி.திசாநாயக்க,**
செயலாளர்,

பிரதி : பிரதேச செயலாளர்கள், பிரதேச செயலகங்கள் - தகுந்த நடவடிக்கைக்காக.

**தொலை பேசி / දුරකතන / Telephone**
அலுவலகம் / කාර්යාලය / Office : 026 2220092
தொலைநகரி / ෆැක්ස් / Fax : 026 2222174
மின்அஞ்சல் / විද්‍යුත් තැපෑල / E-mail : ppsc@ep.gov.lk
198, உட்துறைமுக வீதி, திருகோணமலை
198, ඇතුල්වරාය පාර, ත්‍රිකුණාමලය
198, Inner Harbour Road, Trincomalee